# NFTE TAMILNADU

# இளைஞர் மாநாடு- திரள்க

# ஆகஸ்ட் 20- காரைக்குடி

## Conference of Future Leaders to unearth Deeper Meanings

மகளிர் மாநாடு, இளைஞர் மாநாடு என்ற வகையில் அமைப்புகள் தங்கள் உள் ஊழியர் மாநாடுகளை நடத்தி வருவதை காண்கின்றோம். வங்கி ஊழியர்களின் AIBEA மகளிர் மாநாடுகளை தொடர்ந்து வெற்றிகரமாக நடத்தி வருகிறது. மகளிர் தலைமை பொறுப்புகளுக்கு உயர்ந்து பொது இயக்கங்களை வழி நடத்தும் திறனும் அங்கு பெற்று வருகின்றனர். NFTE தமிழ் மாநில சங்கமும் மகளிர் மாநாடுகளை சிறப்பாக நடத்தியுள்ளது. திருச்சியில் 2008ல் நடந்த மாநாடு உற்சாகத்தை தந்ததுடன் மகளிர் குழுக்கள் அமைந்திடவும் வழிகாட்டியது. மகளிர் குழுக்கள் சார்பில் விழாக்கள் நடைபெறவும் துவங்கியுள்ளன. மேலும் பலம் பெற தொடர் நடவடிக்கைகள் தேவைப் படுகின்றன.

தமிழ் மாநில செயற்குழு வழிகாட்டல் அடிப்படையில் இளைஞர் மாநாடு நடத்திட காரைக்குடி தோழர்கள் முன்வந்து ஆகஸ்ட் 20, 2011 என நாளும் குறிக்கப்பட்டுவிட்டது. காரைக்குடி தோழர்கள் மாரி தலைமையில் களப்பணியில் இறங்கியுள்ளனர். பொருட் செலவை பொருட்படுத்தாது சொந்த பணத்தினை போடத்துவங்கிவிட்டனர். அவர்களது பெரு விழைவெல்லாம் தமிழக முழுவதிலிருந்தும் நூற்றுக்கணக்கான இளைஞர்களின் சங்கமத்தை காணவேண்டும் என்பதுதான்.

தொழிலாளர் என்ற ஒற்றை அடையாளத்திற்குள் நாம் சுட்டப்பட்டாலும், பால், வயது, கேடர் போன்ற உள் அடையாளங்களும் இருக்கவே செய்கின்றன. தொழிலாளர் அனவரும் கூட ஓர் படித்தான உணர்வு நிலைகளில் இருப்பதில்லை. பல்வேறு படிநிலைகளில் தான் இருக்கின்றோம். விருப்பங்களும், தேர்வுகளும், மனநிலைகளும் கூட உள் அடையாளங்களில் சற்று மாறுகின்றன. வளரும் இயக்கங்கள் அவற்றை புறக்கணிக்க முடியாது. புரிந்து கொண்டு ஒத்திசைவை உருவாக்கவேண்டும். .

இளைஞர்கள் இயல்பிலேயே ஆற்றல் மிக்கவர்கள், உணர்வு கொப்பளிப்பவர்கள்- பளிச்சென பேசக்கூடியவர்கள்- ஒளிவு மறைவு அற்றவர்கள். நூறு இளைஞர்களை தாருங்கள்- உலகை மாற்றி விடலாம் என்றார் லெனின். விவேகானந்தரும், பாரதியும் விட்டுச் சென்ற தங்கள் இளம்வயது சிந்தைகள் இந்திய சமுகத்திற்கே ஒளி கூட்டக் கூடியவையாக மிளிர்கின்றன. பகத்சிங் நமது போர்க்குணத்தின் அடையாளமாக திகழ்கிறார்.

இளைஞர்களின் உயிர்த்துடிப்பு, புத்தாக்க குணம், பேராற்றல் மீது நம்பிக்கை வைக்காத சமுகத்தால் முன்னேற முடியாது. இயக்கத்தின் தொடர் வளர்ச்சிக்கு- பாய்ச்சலுக்கு புதிய புதிய தலைமையும் அதன் பண்புகளும் தேவைப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. பல்வேறு பார்வைகளுடன் வந்து சேர்கின்ற இளைஞர்களை NFTE இயக்கம் அதன் நெடிய மரபுத் தொடர்ச்சியின் அடிச்சுவட்டில் பயணிக்க செய்திட காரியம் ஆற்றிட வேண்டும். தலைமை பொறுப்புகளுக்கு உயர்ந்திடும் அளவிற்கு அவர்களின் வேகம், விவேகம், செயலாற்றலை ஆற்றுப்படுத்திட வேண்டும். கிளை மட்டங்களில் துவங்கி அகில இந்திய மட்டம் வரை பொறுப்புகளில் இளைஞர்களின் பங்கேற்பை அதிகரித்து இயக்க வேகத்தை விறுவிறுப்பாக்க வேண்டிய தேவையுள்ளது.

**பழகிப்போன பாதைகளிலேயே பயணிக்காமல், காலத்தின் தேவைகளை உணர்ந்து புதிய சிந்தைகளை தீரத்துடன் வெளிப்படுத்திட இளைய தோழர்கள் உதவுவர் என்ற நம்பிக்கையில்தான் இம்மாநாடு கட்டப்படுகிறது**.

BSNLல் இளைஞர்களே இல்லை- சராசரி வயது 50- பத்தாம் பசலித்தனமான அரசு சேவை மனப்பாங்கு தான் அங்கு உள்ளது என்ற ஏளன விமர்சனங்கள் மீடியாக்களில் பெரிதாக்கப்படுகின்றன. அரசும் , நிர்வாகமும் இதை உறுதிப்படுத்தும் அறிக்கைகளை தந்து கொண்டேயிருக்கின்றன.. BSNLல் லட்சக்கணக்கான இளைஞர்கள் இருக்கின்றனர்- எந்த தொழில்நுட்பத்திலும், எந்த சேவையும், எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் தருவதற்கு தயாரான தீரமிகு இளைஞர் குழாம் இருக்கிறது- இயங்குகிறது என பறைசாற்ற வேண்டிய தருணமிது.

ஏர்டெல், ரிலையன்ஸ் போன்ற தனியார் நிறுவனங்கள் ஒருபோதும் தொலைத்தொடர்பு சேவைக்கு மாதிரிகளாக முடியாது. BSNLயைவிட மிகச்சிறந்த மாதிரி ஏதுமிருக்க முடியாது என்ற நிலையை பொதுப்புத்தியில் உறையச் செய்திட வேண்டிய சவால் நம் முன்னே நிற்கிறது.. BSNL எனில் Transparency, Integrity என்பது ஏற்கப்பட்டுள்ளது .ஆனால் Dedicated இல்லை என்ற குறை நிலவுகிறது. தனியார் நிறுவனங்கள் லாப வேட்டையை ஒருபோதும் விட்டுவிடாது. அதனாலேயே தனது உழைப்பு சுரண்டலை அது தீவிரப்படுத்திக் கொண்டேயிருக்கும். 18500 ஊழியர்களை கொண்டு தீவிரமாக அவர்களது உழைப்பை சுரண்டி 50000 கோடி வருவாய் ஈட்டும் ஏர்டெல் சமுக அக்கறை கொண்ட நிறுவனமாகுமா? வேலைவாய்ப்பை பெருக்காத அசுர வளர்ச்சியால் சமுக பதட்டம் தணியுமா? அரசாங்கத்தை நிர்பந்தித்து அனைத்து சலுகைகளையும் பெறும் தனியார் நிறுவனங்கள் அரசின் சமுக திட்டங்களான இட ஒதுக்கீடு- நட்டம் வந்தாலும் மக்கள் சேவை போன்றவற்றை அமுல் படுத்துவதில்லை. பாராளுமன்ற தணிக்கைகளுக்கு முன் வருவதில்லை. ரிலையன்ஸ் லாபம் இல்லை என்பதால் பிடிஎஸ்களை மூடி செவையை

நிறுத்தியது. ஏர்டெல், வோடொ.ஃபோன் நிறுவனங்கள் நெருக்கடிகளை தீர்த்துக் கொள்ள விலையை ஏற்றத்துவங்கியுள்ளன.

BSNL நிறுவனம் மிகச் சிறந்த பொதுத்துறையின் மரபுகளை சுவீகரிக்காமல் தனியார் பாணி நிர்வாகத்தை தனது பாணியாக்கி கொள்ள முயற்சிக்கிறது. தொழிற்சங்கமில்லா சூழலை அது விழைகிறது. அங்கீகரிக்கப்பட்ட BSNLEUவும் Customer Delight நிர்வாக Vehicleல் அமர்ந்து தனது தொழிற்சங்க தொழிலாளர் கோரிக்கைகளை கீழே போட்டுவிட்டது. Blurred Lines between Management and TU, Holiday To Trade Union Agenda என்ற நிலை நிலவுகிறது. எனவே Restore TU Agenda என்ற முழக்கமும் நடைமுறையும் தேவைப்படுகிறது.

சிந்திக்க, செயல்படுத்திட ஏராள விடயங்கள் உள்ள நிலையில் இளைஞர்களாகிய நீங்கள் கூட இருக்கிறீர்கள். மாநாட்டில் குன்றக்குடி அடிகளார் தமிழ்பொழிவு, தோழர் தா.பாண்டியன் சமர் உரை, நமது தலைவர்கள் ஜி ஜே, எஸ் எஸ் ஜி, தமிழ்மணி,சேது, ஜெயபால் உரைகள், சகோதர சங்க இளந்தலைவர்கள் கலியபெருமாள், விஜய்பாபு உரைகள் அனைத்திற்கும் மேலாக இளந்தோழர்களாகிய உங்களது உரைவீச்சுக்கள் அமையப்போகிறது. பொதுத்துறைதான் நாட்டின் நம்பிக்கை மாதிரி- தொழிற்சங்க உரிமையுடன் இயங்கும் பொதுத்துறை ஊழியர்கள்தான் உழைப்பின் உதாரணம் என்ற உன்னத நிலை உருவாகட்டும்.

**இளைஞர்களே உங்களது பேராற்றலை நம்பித்தான் மாநாடு அழைப்பு விடுத்துள்ளோம் . இளைஞர்களால் இளைஞர்களுக்காக நடத்தப்படும் மாநாடு சிறக்க செய்வீர்**..

2-8-11